செய்தி வெளியீட்டு எண் - 399/2019                    நாள் **23.07.2019**

# பத்திரிக்கை செய்தி

இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி 08.வேலூர் மக்களவை தொகுதிக்கான தேர்தல் வருகின்ற 05.08.2019 (திங்கள் கிழமை) அன்று நடைபெற உள்ளதை தொடர்ந்து அரசாணை எண்:485 பொது(பல்வகை) துறை, நாள்:23.07.2019ன்படி அன்றைய தினத்தினை பொது விடுமுறையாக 08.வேலூர் மக்களவை தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 08.வேலூர் மக்களவை தொகுதிக்குட்பட்ட 43.வேலூர், 44.அணைக்கட்டு, 45.கீழ்வைத்தினான்குப்பம்(தனி), 46.குடியாத்தம்(தனி) 47.வாணியம்பாடி மற்றும் 48.ஆம்பூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு 05.08.2019 (திங்கள் கிழமை) அன்று அரசு பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. மேலும், வேலூர் மக்களவை தொகுதியில் வாக்காளராக பதிவு செய்துள்ள பிற மாவட்டங்களில் பணிபுரிகின்ற அனைத்து ஊழியர்களுக்கும் வாக்குப்பதிவு நாளான 05.08.2019 அன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கவும் அரசாணையில் அறிவிக்கப்பட்டுள்ளது என வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர் - 9